**ஆகஸ்ட் - 13**

**"நாங்கள் கிறிஸ்துவுக்காக ஸ்தானாதிபதிகளாயிருக்கிறோம். " 2 கொரி 5 : 20.**

கிறிஸ்தவர்களாகிய நாம் இந்த எண்ணத்தை எப்பொழுதும் நம்முடைய மனதினுள் முக்கியமானதாக வைத்திருக்க கூடுமானால், அது நம்முடைய குணத்தோடு எவ்வளவு பெரிய கௌரவத்தைக் கூட்டிச் சேர்க்கும்! நம்முடைய குணத்தை மாற்றி உருஅமைக்கும் எவ்வளவு பெரிய சக்தியாக அது இருக்கும்! இப்பொழுது நம்மால் தள்ளி வைக்கப்பட்டிருக்கிறதும் மரித்ததாக எண்ணப்பட்டிருக்கிறதுமான பழைய சுபாவத்தின் நீசமான இழிவான போக்கோடு புது சுபாவம் செய்கிற போரில் அதற்கு எவ்வளவு உதவியாக இருக்கும்! நம்முடைய குடியிருப்போ பரலோகத்தில் இருக்கிறது என்று அப்போஸ்தலன் சொல்லுகிறார். நாம் இன்னமும் இந்த உலகத்தில் வசித்துக்கொண்டிருக்கிறோம். அப்படியிருக்கும்போது இவ்வுலகத்திற்குரியவர்களாக இல்லாதிருக்கிறோம். ஆனால் நம்முடைய ராஜபக்தியையும் பிரஜா உரிமையையும் அந்த ராஜ்ஜியத்திற்கு மாற்றி இருக்கிறோம். ராஜ்ஜியத்திற்குப் புறம்பானவர்களோடும் அந்நியரோடும் உலகத்தில் வசித்துக் கொண்டிருக்கும் போதே, ராஜ்ஜியத்தில் நியமிக்கப்பட்டவர்களாகிய நாம் இப்பொழுது பிரதிநிதிகளாகவும், ஸ்தானாதிபதிகளாகவும் இருக்கிறோம். இந்த பதவிக்குரிய கௌரவத்தையும், கனத்தையும், மிகமுக்கியமான பொறுப்புகளையும் உணர வேண்டும். அதோடு "வார்த்தையினாலாவது, கிரியையினாலாவது நீங்கள் எதைச்செய்தாலும், அதை எல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்யுங்கள்" என்று அப்போஸ்தலன் சொல்லுகிற வார்த்தைகளையும் எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும். **- Z ’04, 72(R 3329)**

இந்த உலகத்தின் செங்கோல் அபகரிக்கப்பட்டு இப்பொழுது சாத்தானுடைய கைகளில் இருந்தாலும், தேவனே இந்த உலகத்திற்கு உரிமையுள்ள ராஜா, தேவன் தம்முடைய ஜனங்களை தமது ஸ்தானாதிபதிகளாக இருப்பதற்காகத் தெரிந்து கொண்டிருக்கிறார். அவர்கள் கிறிஸ்துவின் சார்பாகப் பேசுகிறவர்களாக வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அப்படியிருப்பதினாலே இப்பொழுது இருக்கிற தேவனுடைய ஜனங்களையும், இனி எதிர்பார்க்கிற ஜனங்களையும் விடுவிக்க சாத்தானிடம் உரிமையுடன் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அவர்களுடைய விடுதலைக்காக தேவையான முன்னேற்பாடுகளை செய்துகொண்டும் இருக்கிறோம். அப்படியே, ராஜ்யம் சாத்தானிடமிருந்து கிறிஸ்துவண்டைக்கு மாறப்போவதை மற்றவர்களுக்கு விளம்பரம் செய்து கொண்டிருக்கிறோம். இப்படிப்பட்ட உத்தியோகம் அதை வகிப்பவர்களுக்கு ஒரு உயர்ந்த கனத்தைக் கொடுக்கிறது. நம்முடைய உத்தியோகத்திற்குப் பொருந்தக் கூடிய சாமர்த்தியத்தோடும், பெருந்தன்மையோடும், தயையோடும், நாம் செயல் புரிய வேண்டியிருக்கிறது. இவ்விதமாக நாம் நம்முடைய விவகாரத்தை சரியான மனதையுடைய எல்லா ஜனங்களுக்கும் சிபாரிசு செய்கிறோம். உலகப்பிரகாரமான ஸ்தானாதிபதிகள் தங்களுடைய தேசங்களை கனம் பண்ணத்தக்கவிதமாக செயல்புரிகிறார்கள் என்றால், நாம் இதைவிட மிகவும் அதிகமாக செய்ய வேண்டும். **- P ’36, 95.**

**ஒத்து வாக்கியங்கள் :**

**யோபு 33:23; மல் 2:6,7; 2கொரி 3:6,9; 6:1; எபே 6:20; 1சாமு 2:35; 12:8; எஸ்றா 7:10; ஏசா 52:1-12; எரே 20:9; எசே 34; மத் 10:16-24; 20:25-28; 24:8-11; யோவா 10:1-15; அப் 20:22-24; ரோம 2:21-23; 1கொரி 2:2**

**கோபுர வாசிப்பு : Z ’04, 71 (R 3329)**

**வினாக்கள் : இந்த வாரத்தில் நான் கிறிஸ்துவின் ஸ்தானாதிபதியாக இருந்தேனா? எப்படி? எந்தச் சந்தர்ப்பங்களில்? எது உதவியாக அல்லது தடையாக இருந்தது பலன்கள் என்ன?**